

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை, கரூர் மாவட்டம் பொன்னணியாறு அணை மற்றும் நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை ஆகிய இடங்களில் சுற்றுலாத் தலங்களை உலகத்தரத்தில் மேம்படுத்தும் நோக்கில் 7.46 கோடி செலவில் முடிவுற்ற 4 திட்டப் பணிகளை திறந்து வைத்து, 16.30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட் தொழில் பூங்காக்களில் அமைத்துள்ள 16 புதிய குழந்தைகள் காப்பகங்கள், 120 கோடி ரூபாய் செலவில் விழுப்புரம் மாவட்டத்தில் 157.91 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள திண்டிவனம் மெகா உணவு பூங்கா மற்றும் 70 கோடி ரூபாய் செலவில் தேனி மாவட்டத்தில் 123.49 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள தேனி மெகா உணவு பூங்கா ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அமைப்பின் தலைவர் திருமதி நியடி மேத்தா, முன்னாள் தலைவர் மரு. சி.ஏ. திவ்யா அபிஷேக், FLO அமைப்பின் முன்னாள் தலைவர்கள் திருமதி சுதா ஷிவ்குமார், திருமதி கவிதா தத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்! 27 திட்டப் பணிகள் திறப்பு!

# இந்து அறநிலையத்துறை சார்பில் - 83 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, அக். 14 -**

**இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ரூ.43.20 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.48.81 கோடி செலவிலான 27 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவி பொறியாளர் (மின்), இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் உதவியாளர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 83 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

**இதுகுறித்து செய்திக் குறிப்பு வருமாறு:-**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 43 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 திருக்கோயில்களில் 4 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு உதவி ஆணையர் அலுவலக கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 48 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் 7 திருக்கோயில்களில் 13 முடிவுற்ற பணிகள், ஒரு இணை ஆணையர் அலுவலகம், 13 ஆய்வர் அலுவலகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவி பொறியாளர் (மின்), இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 83 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்குகள் நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருவதோடு, துறையில் அவ்வபோது ஏற்படும் காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன.

**4 திருக்கோயில்களில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தல்**

கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை, சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் பெருந்திட்ட வரைவுப் பணிகளின் கீழ் 33.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயிலின் மலைமேல் மற்றும் அடிவாரத்தில் பக்தர்களுக்கான ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகளுக்கான கட்டுமானப் பணிகள்; வேலூர் மாவட்டம், விரிஞ்சிபுரம், மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயிலில் 4.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் திருப்பணிகள்; நாமக்கல் மாவட்டம், குன்னமலை, வல்லீஸ்வரர் திருக்கோயிலில் 3.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில் திருப்பணிகள்; 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரம்பலூரில் உதவி ஆணையர் அலுவலகம் கட்டும் பணி;

**என மொத்தம் 43.20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.**

**7 திருக்கோயில்களில் 13 முடிவுற்ற கட்டுமானப் பணிகள், ஒரு இணை ஆணையர் அலுவலகம் மற்றும் 13 ஆய்வர் அலுவலகங்களை திறந்து வைத்தல்**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர். சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 15.67 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அன்னதானக் கூடம், சலவைக் கூடம் மற்றும் புனரமைக்கப்பட்ட நாழிக்கிணறு; ஈரோடு மாவட்டம், சென்னிமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 8.27 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்ட மலைப்பாதை தார்சாலை மற்றும் புதிய பசுக்கள் காப்பகம், பக்தர்களுக்கான பேருந்து காத்திருப்பு கூடம்; திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை, அருணாசலேசுவரர் திருக்கோயிலில் 10.47 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கோபுரங்கள் மற்றும் விமானங்களை வண்ண விளக்குகளால் ஒளிரூட்டுதல் மற்றும் ஒருங்கிணைந்த பசுக்கள் காப்பகம்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 3.52 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள திருக்கோயில் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இரண்டு கலைக் கல்லூரிகளில் மொழி ஆய்வுக் கூடங்கள் மற்றும் இடும்பன் திருக்கோயில் முடிக் காணிக்கை மண்டபம்; 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் அலுவலகம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம், அரங்கநாதசுவாமி திருக்கோயிலின் ஜவுளி ரெங்கசாமி கட்டளை தோப்பில் 2.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட பசுமடம்; ஈரோடு மாவட்டம், பண்ணாரி, பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலில் 1.92 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கிரில் அமைப்புடன் கூடிய சுற்றுசுவர்; உத்திரமேரூர், மதுராந்தகம், வேடசந்தூர், ஆத்தூர், உசிலம்பட்டி, திருத்துறைப்பூண்டி, திருக்குவளை ஆகிய இடங்களில் 1.56 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 13 ஆய்வர் அலுவலகங்கள்; காஞ்சிபுரம் மாவட்டம், திருநீர்மலை, ரெங்கநாதப் பெருமாள் திருக்கோயிலில் 1.90 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு;

என மொத்தம் 48.81 கோடி ரூபாய் செலவிலான 27 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவி பொறியாளர் (மின்), இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்**

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள சமய நிறுவனங்களை நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், சொத்துகளை பாதுகாத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வரும் அலுவலர் மற்றும் பணியாளர் பணியிடங்களில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நிரப்பப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக நேற்று முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இந்து சமய அறநிலையத்துறையின் பொறியியல் பணியில் உதவி பொறியாளர் (மின்) பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 12 நபர்களுக்கும் பொறியாளர் சார்நிலை பணியில் இளநிலை வரைதொழில் அலுவலர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 29 நபர்களுக்கும், அமைச்சுப் பணியில் உதவியாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 42 நபர்களுக்கும், என மொத்தம் 83 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலி காட்சி வாயிலாக கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலையிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார், க.கிரியப்பனவர், மாநகராட்சி மேயர் திருமதி கே. ரங்கநாயகி, திருக்கோயில் தக்கார் ச. ஜெயக்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்... முதல் பக்கத் தொடர்ச்சி

**முதல்வரின் உரை!**

அன்றைய தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் முக்கிய பகுதி வருமாறு:-

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மூலம் இனி 37,416 அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 20 இலட்சத்து 59 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவர்.

2022ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாள், பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில், மதுரை மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தேன்.

முதல்கட்டமாக, ஆயிரத்து 545 பள்ளிகளில், ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 95 மாணவர்கள் இந்தத் திட்டத்தால் பயனடைந்தார்கள்.

பிறகு, 25.08.2023 அன்று, முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த திருக்குவளையில், அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் இதை விரிவாக்கம் செய்தோம்.

2024-ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாளில், ஊரகப் பகுதிகளில் இருக்கக்கூடிய அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இதுவரை, 17 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெற்று வந்தார்கள். இந்தத் திட்டத்தின் அட்டகாசமான சக்சஸ் மற்றும் இது கொடுக்கக்கூடிய அபாரமான ரிசல்ட்டைப் பார்த்து, இனி, நகர்ப்புற பகுதிகளில் செயல்படுகின்ற 2 ஆயிரத்து 429 அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்கிறோம். இதனால், கூடுதலாக 3 இலட்சத்து 6 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற இருக்கிறார்கள். கிராண்ட் டோட்டலாக சொல்லவேண்டும் என்றால், இனி தமிழ்நாட்டில் செயல்படுகின்ற 37 ஆயிரத்து 416 அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் படிக்கின்ற 20 இலட்சத்து 59 ஆயிரம் மாணவர்கள் தினந்தோறும் காலையில் சூடாக, சுவையாக, சத்தான சாப்பிட்டு, கிளாஸ் ரூமுக்குள்ளே தெம்பாக நுழைவார்கள்.

ஆண்டொன்றுக்கு 600 கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால், இதை செலவு என்று நான் சொல்லமாட்டேன். இது ஒரு சூப்பரான சோஷியல் இன்வெஸ்ட்மென்ட்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியிருந்தார்.

**‘தி வீக்’ – காணொலி!**

இந்நிலையில் முதலமைச்சரின் இந்த காலை உணவுத் திட்டம் குறித்து ‘தி வீக்’ வீடியோவில் சிறப்பாக விமர்சித்து காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் திருவான்மியூரில் காலை உணவு தயாரிக்கும் இடத்தை படமாக்கி அங்கு அதிகாலை முதல் இது தொடர்பாக மேற்கொள்ளப் பட்டு வரும் பணிகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

தொடக்கத்தில் 1,500 பள்ளிகளில் செயல்பட்ட இத்திட்டம் தற்போது 35,000 பள்ளிகள் வரை விரிவடைந்துள்ளதை அதில் குறிப்பிட்டுள்ளது.

காலையில் மாணவ-மாணவியர்களுக்கு சிற்றுண்டி வழங்குவதில் உடல்நிலையில் வளர்ச்சி, கல்வியில் கவனம், பள்ளிக்கு தொடர்ந்து வருகை, தோழமை உணர்வு அதிகரிப்பு உள்ளிட்டவைகள் அவர்களிடம் நிலவுவதாக ‘தி வீக்’ சுட்டிக்காட்டியது.

இத்திட்டத்தால் மாணவர்களின் பொதுவான திறன் வளர்ச்சி ஏற்பட்டு வருவதை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது என்று மாநில திட்டக்குழுத் துணைத் தலைவர் ஜெயரஞ்சன் பேட்டியும் அதில் வெளியிடப்பட்டுள்ளது.

கல்வியில் மிக நீண்ட பாரம்பரியத்தை கொண்டுள்ள தமிழ்நாட்டில் 1957-ல் பெருந் தலைவர் காமராஜர் அவர்களால் தொடங்கப்பட்ட காலை உணவுத் திட்டம் பல்வேறு மாற்றங்களுடன் 2025-லும் தொடர்ந்து வருவதை அது சுட்டிக்காட்டியுள்ளது. அதுமட்டுமின்றி இந்தியாவில் படிப்பறிவு அதிகரித்து வரும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் பெருமளவு உதவுவதாகவும் ‘தி வீக்’ குறிப்பிட்டுள்ளது.

**வலைதளப் பதிவு!**

இந்நிலையில் இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளதாகவது:

**காலை உணவுத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.**

**சூரியன் உதயம் ஆவதற்கு முன்பே தமிழ்நாடு முழுவதும் குழந்தைகளுக்கான சமையல் கூடங்கள் தயாராகி விடுகின்றன.**

**தினமும் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் நிறைந்த வயிறுடன் தங்களின் நாளைத் தொடங்குகின்றனர்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.

## தலைமைக் கழக அறிவிப்பு

மதுரை வடக்கு மாவட்டம், மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சம்மட்டிபுரம் பகுதிக் கழகச் செயலாளர் **ஆ.க.தவமணி** அவர்கள், அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 600 018.
நாள் : 13.10.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



இராஜபாளையம் தொகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தூய்மை பணியாளர்கள் 521 ஆண்களுக்கு வேஷ்டி, சட்டையும், இனிப்பும் 490 பெண்களுக்கு சேலைகளும், இனிப்புகளும் என மொத்தம் 1011 நபர்களுக்கு இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன் வழங்கினார். இந்நிகழ்வில் ராமமூர்த்தி, மணிகண்டராஜா, கனகராஜ், இளங்கோவன், சிங்கம்புலி அண்ணாவி, கல்பனா, நவமணி, ராதா மற்றும் அணிகளின் நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கவுன்சிலர்கள், தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.